பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 10 2024 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **Algeria, Mauritania, Malawi** ஆகிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அந்நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

2. தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. நாட்டின் கலாச்சார, பாரம்பரியம் மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் நோக்கில் **Alai Balai** திருவிழா இன்று ஹைதராபாதில் நடைபெற்றது.

4. லெபனானில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் வலியுறுத்தியுள்ளார்.

5. உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, **Algeria, Mauritania, Malawi** ஆகிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

மூன்று ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திய குடியரசுத்தலைவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தப் பயணத்தின்போது அந்நாட்டு தலைவர்களுடன், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தும் திருமதி. திரௌபதி முர்மு, அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடனும் கலந்துரையாடுகிறார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

மதுரை, சௌராஷ்ட்ர வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த தொழில் முனைவோர் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசிய அவர் சௌராஷ்டிர மக்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பை அளித்து வருவதாக தெரிவித்தார்.

மதுரை, வண்டியூரில செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு, பயணியர் வசதி மற்றும் பாதுகாப்பு பன்மடங்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில், ஆளும் திமுக அரசு வரிகளை உயர்த்தி, அரசு சேவைகளுக்கான கட்டணங்களையும் பலமடங்கு உயர்த்தியுள்ளதாகவும் திரு. எல். முருகன் குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

விழாக்கள் மூலம் நாட்டில் பலதரப்பு மக்களின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் நோக்கில் **Alai Balai** திருவிழா இன்று தெலங்கானாவின் ஹைதராபாத் நகரில் நடைபெற்றது.

தசரா பண்டிகையின் நிறைவை ஒட்டி வழக்கமாக நடைபெறும் இந்த விழாவில் தெலங்கானா, உத்ராகண்ட், ராஜஸ்தான், மேகாலயா மாநில ஆளுநர்களும், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வெங்கைய நாயுடு உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. வெங்கைய நாயுடு, நாட்டு மக்களுக்கு இடையே விழாக்கள் மூலம் ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்றும் **Alai Balai** விழாக்கள் பல இடங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை, எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் கருவியாகவும் **Alai Balai** விழா திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ஏழரை கோடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான பணிகள் 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்களை திறந்து வைத்துப் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். தமிழகத்தில் உள்ள 25 மாநகராட்சிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இங்கிலாந்து முன்னாள் பிரதமர் திரு. போரிஸ் ஜான்சன் எழுதியுள்ள புத்தகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

தாம் பிரதமராக பதவி வகித்த போது, இந்தியாவுடனான உறவு சிறப்பாக இருந்ததாகவும், அப்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் நடத்திய ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் குறித்தும் அவர் அந்த புத்தகத்தில் எடுத்துரைத்துள்ளார்.

திரு. நரேந்திர மோடி பெரிய மாற்றங்களை எளிதாக செயல்படுத்தும் திறன் கொண்டவர் என்றும் திரு. போரிஸ் ஜான்சன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

லெபனானில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் வலியுறுத்தியுள்ளார்.

லெபனான் நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு. நபிக் பெரி-யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய அவர், இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இஸ்ரேலிய துருப்புக்கள் லெபானானில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அப்பாவி பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

லெபனான் மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் இம்மாதம் 24ஆம் தேதி பாரிஸில் சர்வதேச கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஐ.நா. பாதுகாப்பு படையினர் லெபனானில் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. இமானுவேல் மேக்ரோன் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, லெபனான் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இஸ்ரேல் கடந்த செப்டம்பர் மாதம் லெபனான் மீதான தாக்குதலை தொடங்கியதிலிருந்து இதுவரை ஆயிரத்து 645 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

போலந்தில் சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கும் வகையில் அடைக்கலம் வழங்கும் உரிமைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக அந்நாட்டுப் பிரதமர் திரு. **Donald Tusk** அறிவித்துள்ளார்.

**Warsaw**-வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அடைக்கல உரிமைகள் தவறாக பயன்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இதனை கருத்தில் கொண்டு சட்டவிரோதமாக பிற நாட்டினர் போலந்திற்குள் நுழைவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. **Donald Tusk** கூறினார்.

>>>>>><<<<<<<

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா மற்றும் ஆந்திர கடலோரப் பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், கொங்கன், கோவா, மத்திய மகாராஷ்ட்ரா, மத்தியப்பிரதேசம், விதர்பா, சத்திஷ்கர் ஆகிய பகுதிகளில் ஒரு வார காலத்திற்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், மேற்குவங்கம், சிக்கிம் மற்றும் சத்திஷ்கரின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் நாடுமுழுவதும் தென்மேற்கு பருவமழை முற்றிலுமாக முடிவுக்கு வரும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

அடுத்த 24 மணி நேரத்தில், தஞ்சை, திருவாரூர், மதுரை, தேனி, விருதுநகர் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறினார். தமிழக கடலோர பகுதிகளில் சூறைக்காற்று வீசுவதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதாகவும் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

சார்ஜாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ளது.

>>>>>><<<<<<<

தோஹாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளிப்பதக்கதங்களை வென்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sarth Mishra – Ankur Bhattacharjee** இணை தங்கப்பதக்கத்தையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ankur** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Divyanshi-**யும், இரட்டையர் பிரிவில் **Divyanshi - Syndrela** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் **Rupam - Sahil** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Syndrela - Soham** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

>>>>>><<<<<<<

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ayhika Mukherjee - Sutirtha Mukherjee** இணை வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Tanya Hemanth** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-17 என்ற செட்கணக்கில் சீன தைபே-யின் **Tung Ciou Tong** –ஐ வென்றார்.

>>>>>>END<<<<<<<